# INTERNATONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –II ( MARCH -2015 )

## TAMIL - CLASS –VII

தமிழ் - ஏழாம் வகுப்பு

Time :- 3 Hours — Maximum Marks :- 90

நேரம் :- 3 மணி — மதிப்பெண்கள் :- 90

## பகுதி- 1

அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. 5 x 2 = 10

மண்ணாசைக் காரணமாகவும், வல்லரசாக மாற வேண்டும் என்பதற்காகவும், தங்களது மேலாண்மையை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவும் ஆதிகாலம் தொட்டு நாடுகளுக்கு இடையே போர் நடந்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் மடிந்துள்ளனர். இத்தகைய போக்கை தடுக்கவே உருவாக்கப்பட்டதே ஐக்கிய நாடுகள் சபையாகும். 1945 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் இச்சபை தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் வின்சென்ட் சர்ச்சில் இருவரும் சேர்ந்து ஏற்படுத்தினர். உலகில் ஐம்பது நாடுகள் இதில் உறுப்பினராக சேர்ந்தன. இதன் நிரந்தர உறுப்பு நாடுகள் பிரிட்டன் , அமெரிக்கா , இரஷ்யா , பிரான்ஸ் , சீனா ஆகியனவாகும். இந்தியாவும் நிரந்தர உறுப்பு நாடாக முயன்று வருகிறது. உலக நாடுகளுக்கிடையே போரை ஒழிப்பது , நீதியை நிலை நாட்டுவது , நல்லுறவை வளர்ப்பது , மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பது , பின்தங்கிய நாடுகளுக்கு உதவுவது , குழந்தைகள் நலன் காப்பது போன்றவை இதன் குறிக்கோள்களாகும்.

வினாக்கள் :-

1. ஐ.நா.சபையை உருவாக்கியவர் யாவர் ?

2. ஐ.நா.சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் எவை ?

3. ஐ.நா.சபையின் குறிக்கோள்கள் சில எழுதுக.

4. ஆதிகாலத்தில் போர் நடக்கக் காரணம் என்ன ?

5. ஐ.நா.சபை எங்கு , எப்போது தோற்றுவிக்கப்பட்டது ? உலகின் எத்தனை நாடுகள் உறுப்பினராகச் சேர்ந்தன ?

ஆ. ' நூல் நிலையம் ' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக. 1 x 8= 8

இ. பின்வருபனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் கடிதம் எழுதுக 1 x 8= 8

1. விடுமுறையைக் கழிக்க வருமாறு உன் தோழன்/தோழிக்குக் கடிதம் எழுதுக.

2. குடிநீர் வசதி அமைத்துத் தர வேண்டி பஞ்சாயத்துத் தலைவருக்கு விண்ணப்பம் வரைக.

## பகுதி -2

**இலக்கணம் :-** 15 x1 =15

அ. பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முற்றுப்போலி

அ. அறம் ஆ. அரைசன் இ. அஞ்சு ஈ. அகன்

2. பொருட்பெயர்

அ. ஆக்ரா ஆ. வேர் இ. ஐப்பசி ஈ. மலை

3. பிறமொழிச்சொல்

அ. கல்யாணம் ஆ. கருவூலம் இ. திருமுருக்கு ஈ. இராணுவ வீரன்

ஆ. தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

4. முற்றுப்போலி , முன்பின்னாகத் தொக்கப்போலி இவை இரண்டும் ________ யைச் சாரும்

அ. முதற்போலி ஆ. இடைப்போலி இ. ஈற்றுப்போலி ஈ. எதுவுமில்லை

5. பெயர்ச்சொல் ________ வகைப்படும்.

அ. இரண்டு ஆ. நான்கு இ. ஐந்து ஈ. ஆறு

6. காகத்தின் ஒலி மரபுச்சொல் ________

அ. கரைதல் ஆ. கூவுதல் இ. அகவுதல் ஈ. கொஞ்சுதல்

இ. அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7. நிலம் (போலியாக்குக)

அ. நிலா ஆ. நிலவு இ. நிலன் ஈ. நிலமடந்தை

8. கிளி (பண்புப்பெயர் சேர்க்க)

அ. அழகான கிளி ஆ. பாடும் கிளி இ. பச்சைக் கிளி ஈ. பறக்கும் கிளி

9. தாழை இலை (மரபு வழு நீக்குக)

அ. தாழை மடல் ஆ. தாழைத் தட்டை இ. தாழைக் கூந்தல் ஈ. தாழை ஓலை

ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

10. இலைஞ்சி

அ. முதற்போலி ஆ. இடைப்போலி இ. கடைப்போலி ஈ. முற்றுப்போலி

11. தை

அ. பண்புப்பெயர் ஆ. சினைப்பெயர் இ. காலப்பெயர் ஈ. இடப்பெயர்

12. சௌக்கியம்

அ. பிறமொழிச்சொல் ஆ. தமிழ்ச்சொல் இ. ஆங்கிலச்சொல் ஈ. சீனச்சொல்

உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

13. அ. அதிருப்தி என்பதன் தமிழ்ச்சொல் நலம்

ஆ. அதிருப்தி என்பதன் தமிழ்ச்சொல் மனக்குறை

இ. அதிருப்தி என்பதன் தமிழ்ச்சொல் எழுத்தர்

ஈ. அதிருப்தி என்பதன் தமிழ்ச்சொல் குடமுழுக்கு

14. அ. அஞ்சு - முதற்போலி

ஆ. அஞ்சு - முற்றுப்போலி

இ. அஞ்சு - கடைப்போலி

ஈ. அஞ்சு - இடைப்போலி

15. அ. முன்னோர்கள் பயன்படுத்தியச் சொல்லையே நாமும் பயன்படுத்துதல் - மரபுச்சொல்

ஆ. முன்னோர்கள் பயன்படுத்தியச் சொல்லையே நாமும் பயன்படுத்துதல் - மரபுப் பிழை

இ. முன்னோர்கள் பயன்படுத்தியச் சொல்லையே நாமும் பயன்படுத்துதல் - போலி

ஈ. முன்னோர்கள் பயன்படுத்தியச் சொல்லையே நாமும் பயன்படுத்துதல் - மரபு வழு

## பகுதி -3

**1. பொருள் கூறுக.** 3 x 1= 3

அ. துயர்உறா - ஆ. அருமை - இ. நெஞ்சுரம்

**2. பிரித்து எழுதுக.** 3 x 1= 3

அ. சிற்றுளி - ஆ. உட்பூசல் - இ. எந்நாட்டவர்க்கும்

**3. எதிர்ச்சொல் எழுதுக.** 3 x 1= 3

அ. விழிப்பு x ஆ. கவலை x இ. நல்வழி

**4. நிரப்புக.** 2 x 1= 2

அ. சோழநாடு ____________ , ____________ என பிரிக்கப்பட்டு இருந்தது.

ஆ. கம்பரிசியில் சமைக்கப்படும் உணவுகள் ____________ , ____________

**5. சொற்றொடர் எழுதுக.** 1 x 2= 2

பாராட்டு அல்லது இகழ்தல்

**6. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.** 2 x 1= 2

1. முக்கனி - 2. நாற்றிசை -

## பகுதி -4

அ. கீழ்க்காணும் பாடலைப் படித்து, கேட்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடையளி 5 x 1= 5

முற்றும் உணர்ந்தவர் இல்லை, முழுவதூஉம்

கற்றனம் என்று களியற்க – சிற்றுளியால்

கல்லும் தகரும் தகரா கனங்குழாய் !

கொல்லுலைக் கூடத்தி னால்

வினாக்கள் :-

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?

அ. திருக்குறள் ஆ. நீதிநெறி விளக்கம் இ. ஆத்திச் சூடி

2. இப்பாடலின் ஆசிரியர் ________________

அ. குமரகுருபரர் ஆ. ஔவையார் இ. பாரதியார்

3. சிற்றுளியால் தகரக் கூடியது எது ?

அ. மனம் ஆ. கொல்லன் உலை இ. மலை

4. ' களியற்க ' என்பதன் பொருள் ________________

அ. செருக்குக் கொள்ளக் கூடாது ஆ. வருத்தமடையக் கூடாது இ. உண்ணுதல் கூடாது

5. கொல்லுலை – பிரித்தெழுதுக.

அ. கொல் + உலை ஆ. கொல்லன் + உலை இ. கொல்லு +உலை

ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1= 5

1. யானை சிந்தும் உணவு இதற்குப் பயன்படுகிறது.

அ. மனிதர்களுக்கு ஆ. காட்டு விலங்குகளுக்கு இ. எறும்புகளுக்கு

2. முடக்கற்றான் இலை இந்நோயைக் குணப்படுத்தும்

அ. மஞ்சள் காமாலை ஆ. முடக்கு வாதம் இ. இரத்த சோகை

3. இது ஆவியில் வேக வைக்கப்படும்

அ. முறுக்கு ஆ. இடியாப்பம் இ. பரோட்டா

4. இக்குணம் தன்னையே வியந்து பாராட்டும்

அ. நற்குணம் ஆ. பெருமைக் குணம் இ. சிறுமைக் குணம்

5. பழமரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப் போன்றவர்கள் இவர்கள்

அ. அரசர்கள் ஆ. புலவர்கள் இ. வீரர்கள்

**இ. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி :-** 4 x 2= 8

1. பெருமைக்குணம் , சிறுமைக்குணம் - வேறுபடுத்துக.

2. ஒரு செயலில் ஈடுபடுபவர் எவற்றைப் பொருட்படுத்த மாட்டார் ?

3. ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக் கூடாது ஏன. ?

4. நெடுங்கிள்ளி இளந்தத்தனாரிடம் கூறியது யாது ?

5. கீரையை உண்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

**ஈ. அடிமாறாமல் எழுதுக.** 2+2+4=8

1. ' சொல்லுக' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

2. ' வியந்து' என முடியும் குறளை எழுதுக.

3. ' மெய்வருத்தம்' எனும் நீதிநெறி விளக்கப் பாடலை எழுதுக.

**உ. பின்வரும் துணைப்பாடக் கட்டுரைகளுள் ஏதேனும் ஒன்றனை மட்டும் எழுதுக**

1 x 8= 8

1. வெற்றியின் முதற்படி

2. விகடகவி தெனாலிராமன்